Prepp
Your Personal Exams Guide

# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## தீயணைப்பாளர் பணிக்கான தேர்வு - 2008

**வினாத்தாள் வரிசை** **A** தேர்வு நாள் : 5.10.2008 **பதிவு எண்:**

நேரம் : 80 நிமிடங்கள் மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரைகள்**

1. இவ்வினாத்தாளில் பகுதி 'அ' பொது அறிவு சம்பந்தப்பட்டது. அதில் 50 வினாக்கள் உள்ளன. பகுதி 'ஆ' உளவியல் சம்பந்தப்பட்டது. அதில் 30 வினாக்கள் உள்ளன.
2. வரிசை எண் 1 முதல் 50 வரை பகுதி–அ வில் உள்ள பொது அறிவு வினாக்களையும் வரிசை எண் 51 முதல் 80 வரை பகுதி –ஆ வில் உள்ள உளவியல் வினாக்களையும் குறிக்கும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள இந்த வினாத்தாளின் வரிசையை, விடைத்தாளில் அதற்குரிய இடத்தில் பட்டை தீட்டவும். வினாத்தாளின் வரிசையை பட்டைத் தீட்டாவிட்டால், அந்த விடைத்தாள் மதிப்பிட மாட்டாது.
4. 80 கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு மதிப்பெண்.
6. நீலம் (அ) கருப்பு நிற பால் பாயிண்ட் பேனாவை கொண்டு பதிவு எண்ணை அதற்குரிய கட்டத்தில் நிரப்பவும்.
7. பதிவு எண் மற்றும் விடைகளை நீலம் (அ) கருப்பு நிற பால் பாயிண்ட் பேனாவை கொண்டு அந்தந்த வட்டங்களில் பட்டை தீட்டவும்.
8. ஒரு வினாவிற்கு ஒரு விடையை மட்டுமே தேர்ந்தெடுத்து பட்டை தீட்டவும்.
9. தவறாக பட்டை தீட்டுவதையும் அடித்தல் திருத்தங்கள் செய்வதையும் தவிர்க்கவும். பதிவு எண்ணையும், விடைகளையும் கவனமாக பட்டை தீட்டவும். பதிவு எண்ணையும், விடைகளையும் சரியாக பட்டை தீட்டப்படாத விடைத்தாள் மதிப்பிடப்பட மாட்டாது.
10. பதிவு எண்ணை, கேள்வித்தாளில் அதற்கென குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எழுதவும்.

## பகுதி அ : பொது அறிவு

**1. சிப்பாய் கலகம் எந்த ஆண்டு நடைபெற்றது?**
A) 1857 B) 1875
C) 1942 D) 1947

**2. இரவீந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசினைப் பெற்றுத் தந்த நூல் எது?**
A) கோரா
B) கீதாஞ்சலி
C) கடைசிக்கவிதை
D) தி ஹங்ரி ஸ்டோன்ஸ்

**3. மின்விளக்கு பல்பை முதலில் கண்டுபிடித்தவர் யார்?**
A) மார்க்கோனி
B) மைக்கேல் ஃபாரடே
C) ஜெகதீஷ் சந்திர போஸ்
D) தாமஸ் ஆல்வா எடிசன்

**4. கீழ்க்கண்டவற்றில் புலிகளின் சரணாலயம் எது?**
A) புலிக்கட்
B) வேடந்தாங்கல்
C) வேதாரண்யம்
D) முண்டந்துறை

**5. கோதாவரி நதி எந்தக் கடலினுள் பாய்கின்றது?**
A) அரபிக்கடல்
B) இந்துமகாசமுத்திரம்
C) மன்னார் வளைகுடா
D) வங்காள விரிகுடா

6. ‘ஆசிரியர் தினம்’ எப்போது கொண்டாடப்படுகிறது?
A) ஆகஸ்டு 15
B) ஜனவரி 26
C) செப்டம்பர் 5
D) நவம்பர் 19

7. எந்த வைட்டமின் குறைபாடு காரணமாக மாலைக்கண் நோய் (Night Blindness) ஏற்படுகிறது?
A) வைட்டமின் A
B) வைட்டமின் B
C) வைட்டமின் C
D) வைட்டமின் D

8. லிக்னைட் (Lignite) என்பது ஒரு
A) எரிபொருள்
B) மருந்து
C) வேர்
D) திரைப்படம்

9. ‘பேக்கிங் சோடா’ (Baking Soda) என்பது
A) சோடியம் கார்பனேட்
B) சோடியம் பைகார்பனேட்
C) சோடியம் குளோரைடு
D) சோடியம் ஹைட்ராக்ஸைடு

10. மகாத்மா காந்தியின் சமாதிக்கு என்ன பெயர்?
A) விஜயகாட்
B) ராஜ்காட்
C) சாந்திவனம்
D) சக்திஸ்தலம்

11. ‘டியூபெக்டமி’ (Tubectomy) என்னும் அறுவை சிகிச்சை எதற்காக செய்யப்படுகிறது?
A) டான்சிலுக்காக
B) விரை வீக்கத்திற்காக
C) வயிற்றுப் புண்ணுக்காக
D) குடும்பக்கட்டுப்பாட்டிற்காக

12. மகாகவி காளிதாஸ் எந்த அரசருடைய அவையில் கவிஞராக இருந்தார்?
A) சந்திரகுப்தர்
B) அசோகர்
C) ஹர்ஷவர்த்தனர்
D) விக்கிரமாதித்தன்

13. ஒசாமா பின்லேடனுக்கு ஆதரவாகப் போரிடுகின்ற தீவிரவாதிகள் யார்?
A) தலிபான்கள்
B) முஜாஹிதீன்கள்
C) அல்கொய்தா அமைப்பு
D) விடுதலைப்புலிகள்

14. சுத்தமான தங்கம் என்பது
A) 18 காரட்
B) 16 காரட்
C) 22 காரட்
D) 24 காரட்

15. முதல் இந்திய விண்வெளி வீராங்கனை யார்?
A) ஷைனி வில்சன்
B) கிரண் பேடி
C) கல்பனா சாவ்லா
D) பூலா சௌத்ரி

16. புவியீர்ப்பு விசைக் கோட்பாட்டினைக் கண்டுபிடித்தவர் யார்?
A) ஜான் டால்டன்
B) ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
C) நியூட்டன்
D) தாமஸ் ஆல்வா எடிசன்

17. சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் யார்?
A) வி.வி. கிரி
B) ஜாகிர் உசேன்
C) ராஜேந்திர பிரசாத்
D) பக்ருதீன் அலி அகமது

18. ‘செஞ்சதுக்கம்’ எங்கே உள்ளது?
A) லண்டன்
B) பெய்ஜிங்
C) மாஸ்கோ
D) நியூயார்க்

19. ‘தங்கக் கோயில் நகரம்’ (City of Golden Temple) என அழைக்கப்படுவது எது?
A) மதுரை
B) அமிர்தசரஸ்
C) சண்டிகர்
D) சிதம்பரம்

20. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் எங்கே உள்ளது?
A) லண்டன்
B) நியூயார்க்
C) சிகாகோ
D) புதுடில்லி

21. திரவ நிலையில் உள்ள உலோகம் எது?
A) கந்தகம்
B) பாதரசம்
C) குரோமியம்
D) அயோடின்

Prepp
Your Personal Exams Guide

22. ஒரு மைல் என்பது சுமார்
A) 2.60 கி.மீ.
B) 1.50 கி.மீ.
C) 1.61 கி.மீ.
D) 1.28 கி.மீ.

23. மௌரியர்களின் தலைநகரம் எங்கு இருந்தது?
A) சாரநாத்
B) ஜான்சி
C) பாடலிபுத்திரம்
D) ஆக்ரா

24. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் நடக்க இருக்கும் நகரம் எது?
A) பாரிஸ்
B) நியுயார்க்
C) லண்டன்
D) ரோம்

25. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது என்ன?
A) 60 வயது
B) 62 வயது
C) 65 வயது
D) 68 வயது

26. பருத்தி விளைவதற்கு ஏற்ற மண்?
A) செம்மண்
B) கரிசல் மண்
C) வண்டல் மண்
D) சரளை மண்

27. தமிழ்நாட்டில் உள்ள மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை
A) 28 B) 30
C) 31 D) 32

28. இரு எண்களின் பெருக்கற்பலன் 32 அவைகளின் கூடுதல் 12 என்றால் அந்த எண்கள் யாவை?
A) 8, 6 B) 16, 2
C) 10, 2 D) 8, 4

29. சிக்கிம் மாநிலத்தின் தலைநகரம்
A) கேங்டாக்
B) ஜெய்ப்பூர்
C) திஸ்பூர்
D) கோஹிமா

30. காவிரி ஆறு உற்பத்தி ஆகும் மாநிலம் எது?
A) தமிழ்நாடு
B) ஆந்திரா
C) கர்நாடகா
D) கேரளா

31. கதகளி எந்த மாநிலத்தின் நாட்டியம் ஆகும்?
A) ஆந்திரா
B) ஒரிஸா
C) கர்நாடகா
D) கேரளா

32. கல்லணை எந்த மன்னர்களால் கட்டப்பட்டது?
A) சேர மன்னர்களால்
B) பாண்டிய மன்னர்களால்
C) சோழ மன்னர்களால்
D) பல்லவ மன்னர்களால்

33. பாவேந்தர் என்பது யாரைக் குறிக்கும்?
A) பாரதியார்
B) பாரதிதாசன்
C) கண்ணதாசன்
D) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

34. இப்போது நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டியில் அதிக தங்கப்பதக்கம் வென்ற நாடு எது?
A) அமெரிக்கா
B) ரஷ்யா
C) இங்கிலாந்து
D) சீனா

35. இந்தியர் ஒருவர் தனிநபர் விளையாட்டில் ஒலிம்பிக்கில் முதல் தங்கப்பதக்கம் வென்றது எந்தப்போட்டியில்?
A) குத்துச்சண்டை
B) மல்யுத்தம்
C) டென்னிஸ்
D) துப்பாக்கி சுடும் போட்டி

36. ஆந்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ள ஏவுகணை தளத்தின் பெயரினைக் குறிப்பிடுக.
A) ஸ்ரீஹரிகோட்டா
B) விசாகப்பட்டினம்
C) ஐதராபாத்
D) கடப்பா

37. வானம் நீல நிறமாக தோன்றுவதற்கான காரணங்கள் என்ன?
A) ஒளி விலகல்
B) ஒளி சிதறல்
C) சந்திரன் நிழல்படுவதால்
D) நீல நிற வாயுக்களால்

38. மனித உடம்பில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை என்ன?
A) 216 B) 206
C) 212 D) 210

39. சூரியனை பூமி சுற்றுகிறது, என அறிந்து கூறியவர் யார்?
A) ஜேம்ஸ் சாட்விக்
B) மெண்டல்
C) கோப்பர் நிக்கஸ்
D) சர். ஐசக் நியூட்டன்

40. மக்கள் தொகை எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை கணக்கிடப்படுகிறது?
A) 5 ஆண்டுகள்
B) 7 ஆண்டுகள்
C) 10 ஆண்டுகள்
D) 15 ஆண்டுகள்

Prepp
Your Personal Exams Guide

**41. அருணாச்சலப்பிரதேசத்தின் தலைநகரம்**

A) இம்பால்
B) ஷில்லாங்
C) இடா நகர்
D) சில்வாசா

**42. 'ரஞ்சி டிராபி' எதனுடன் தொடர்புள்ளது?**

A) கிரிக்கெட்
B) ஹாக்கி
C) கால்பந்து
D) டென்னிஸ்

**43. 'டேவிஸ் கப்' எந்த விளையாட்டுப் போட்டியுடன் தொடர்புள்ளது?**

A) ஹாக்கி
B) டென்னிஸ்
C) கிரிக்கெட்
D) சதுரங்கம்

**44. 'கோள்கள் நகரும் விதி' (Laws of Planetary Motion) யை எடுத்துரைத்த விஞ்ஞானி**

A) கோப்பர் நிக்கஸ்
B) கெப்ளர்
C) சார்லஸ் டார்வின்
D) பெஞ்சமின் பிராங்க்ளின்

**45. நெருப்பை அணைக்க உபயோகப்படும் வாயு எது?**

A) ஹைட்ரஜன்
B) கார்பன் டை ஆக்ஸைடு
C) ஹீலியம்
D) ஆக்ஸிஜன்

**46. 'எருதுச்சண்டை' (Bull Fight) பிரபலமான விளையாட்டாக விளங்கும் நாடு எது?**

A) பெல்ஜியம்
B) ஸ்பெயின்
C) மலேசியா
D) தாய்லாந்து

**47. கீழ்க்கண்டவற்றுள் எது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலமாகும்?**

A) நிலக்கரி
B) பெட்ரோலியம்
C) கடலலை ஆற்றல்
D) இயற்கை வாயு

**48. இவற்றுள் கடற்கரை இல்லாத நாடு எது?**

A) வங்கதேசம்
B) பாகிஸ்தான்
C) மியான்மர்
D) நேபாளம்

**49. இரத்தத்தில் நோய் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டது**

A) சிவப்பு அணுக்கள்
B) பிளாஸ்மா
C) வெள்ளை அணுக்கள்
D) தட்டணுக்கள்

**50. சிப்கோ இயக்கம் (Chipko Movement) எதைப் பாதுகாக்க துவங்கப்பட்டது?**

A) மரங்களை
B) பசு மாடுகளை
C) நீர்வளத்தை
D) மீன்வளத்தை

## பகுதி ஆ : உளவியல்

**அடுத்து வரும் ஐந்து வினாக்களில் வரிசையாக சில எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த எண் களுக்குள் ஒரு தொடர்பு உள்ளது. ஒவ்வொரு வினாவிலும் அடுத்து வரும் எண் எது என்று குறிப்பிடவும்.**

**51. 81, 64, 49, 36, ......?**

A) 24
B) 20
C) 16
D) 25

**52. 27, 64, 125, 216, ......?**

A) 512
B) 343
C) 256
D) 428

**53. 11, 13, 17, 19, ......?**

A) 31
B) 37
C) 23
D) 21

**54. 6, 11, 21, 36, 56, ......?**

A) 51
B) 91
C) 42
D) 81

**55. 1, 3, 7, 15, 31, ......?**

A) 62
B) 63
C) 64
D) 65

**கீழ்க்கண்ட பாராவை படித்து அதன் அடிப்படையில் அடுத்து வரும் 5 கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.**

**P, Q, R, S, T என்ற ஐந்து நபர்களில் ஒருவர் மட்டும் கால்பந்து விளையாடுபவர், மற்றொருவா சதுரங்கம் விளையாடுபவர். மேலும் ஒருவா கூடைப்பந்து விளையாடுபவர். P மற்றும் S என்பவர்கள் திருமணமாகாத பெண்கள். அவர்கள் இருவரும் எந்த ஒரு விளையாட்டும் விளையாடாத-வர்கள். இந்த ஐவரில் உள்ள பெண்கள் எவரும் சதுரங்கமோ, கால்பந்தோ விளையாடுபவர்கள் இல்லை. அவர்களில் ஒரு திருமணமான தம்பதியுள்ளனர். அந்த தம்பதியில் Tதான் கணவர்.**

**Q என்பவர் Rன் சகோதரன். Q சதுரங்கமோ, கூடைப்பந்தோ விளையாடுபவர் அல்ல.**

**56.** கால்பந்து விளையாடுபவர் யார்?

A) P

B) Q

C) R

D) T

**57.** கூடைப்பந்து விளையாடுபவர் யார்?

A) P

B) Q

C) R

D) T

**58.** சதுரங்கம் விளையாடுபவர் யார்?

A) P

B) Q

C) R

D) T

**59.** T என்பவரின் மனைவி யார்?

A) P

B) Q

C) R

D) S

**60.** அந்த குழுவில் 3 பெண்கள் யார்?

A) PQR

B) QRS

C) PQS

D) PRS

**ஒரு சங்கேத மொழியில் ஆங்கில எழுத்துகளுக்கு பதிலாக எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆங்கில வார்த்தைக்கு கீழே அதனை குறிக்கும் எண்கள் தரப்பட்டுள்ளது. ஆனால் அந்த எண்கள் வரிசையாக இல்லாமல் கலந்துள்ளது. எந்த ஆங்கில எழுத்துக்கு எந்த எண் என்று அறிந்து, அடுத்து வரும் ஐந்து வினாக்களுக்கு பதில் தரவும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| STURX | XWTQV | ZYRVS | QWUYZ | QSZUT |
| 27069 | 84217 | 96435 | 58301 | 21605 |

**61.** Z–ஐ குறிக்கும் எண் எது?

A) 0

B) 5

C) 7

D) 4

**62.** V–ஐ குறிக்கும் எண் எது?

A) 3

B) 6

C) 4

D) 9

**63.** Q–ஐ குறிக்கும் எண் எது?

A) 1

B) 2

C) 7

D) 0

**64.** 35 என்ற எண் எதைக் குறிக்கும்?

A) XY

B) UV

C) YZ

D) RX

**65.** 10 என்ற எண் எதைக் குறிக்கும்?

A) UT

B) VQ

C) SZ

D) QU

**66.** கோடைகாலத்தில் வெண்மையான உடைகளை அணிவது நல்லது. ஏனெனில்:

A) வெள்ளை ஆடைகள் மென்மையாகவும் இதமாகவும் இருக்கும்.

B) வெள்ளை ஆடைகள் அணிவதற்குச் சௌகரியமாக இருக்கும்.

C) வெள்ளை ஆடைகள் கருப்பு ஆடைகளைவிடக் குறைந்த அளவு வெப்பத்தையே உள்ளிழுக்கும்.

D) வெள்ளை ஆடைகள் துவைப்பதற்கு எளிது.

**67.** காவலர்கள் சீருடை அணிய முக்கியமான காரணம்?

A) கெட்டியாகவும் அழுத்தமாகவும் இருப்பதால்

B) எல்லோரும் எளிதில் தெரிந்து கொள்வதற்காக

C) திருடர்களைப் பயமுறுத்துவதற்காக

D) சீருடையில் சிறப்பாக மிடுக்கோடு எடுப்பாய் இருப்பதற்காக

**68.** 31 மாணவர்கள் மட்டுமே உள்ள ஒரு வகுப்பில் நீங்கள் 13வது ரேங்கில் உள்ளீர்கள் என்றால், கடைசியி லிருந்து நீங்கள் எத்தனாவது ரேங்கில் உள்ளீர்கள்?

A) 15 C) 18

B) 19 D) 20

Prepp Your Personal Exam Guide

Prepp
Your Personal Exams Guide

**69. நீங்கள் வடகிழக்கு திசைநோக்கி 3 கி.மீ நடந்தபின் சரியாக $90^\circ$ வலதுபுறம் திரும்பி 4 கி.மீ. நடக்கின்றீர்கள். பின்பு மீண்டும் சரியாக $90^\circ$ வலது புறம் திரும்பி நடக்க ஆரம்பிக்கிறீர்கள். அப்படியானால் இப்போது எந்தத் திசை நோக்கி நடக்க ஆரம்பிக்கின்றீர்கள்?**

A) தெற்கு
B) தென்மேற்கு
C) தென்கிழக்கு
D) கிழக்கு

**70. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

**ஓவியம் : ஓவியன்; ராகம் : ..................**

A) கவிஞர்
B) கட்டுரையாளர்
C) இசையமைப்பாளர்
D) நாவல் எழுதுபவர்

**71. கோடிட்ட இடத்தில் நிரப்ப வேண்டியது எது?**

**வானம் : விமானம்; நீர் : ...............**

A) மீன் B) கப்பல்
C) சைக்கிள் D) முதலை

**72. ஆப்பிளுக்கு மரம் என்றால், திராட்சைக்கு................**

A) கொடி
B) செடி
C) பழம்
D) இனிப்பு

**73. ஓரிடத்தில் இரண்டு பேர் பேசிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் மற்றவரைப் பார்த்து நீங்கள் என் தந்தை என்றாலும் நான் உங்களுக்கு மகன் அல்ல எனச்சொல்கிறார். அப்படியானால் அவர்களின் உறவுமுறை என்ன?**

A) மாமனார் மருமகள்
B) தந்தை மகள்
C) தந்தை மகன்
D) மாமனார் மருமகன்

**74. அருண் ஒரு பெண்ணைக்காட்டி இப்பெண் என் தாயாரின் பேரனுக்கு மனைவி என்றால் அருண் அப்பெண்ணுக்கு என்ன உறவுமுறை ஆவார்?**

A) கணவன்
B) மாமனார்
C) தகப்பனார்
D) இவை எதுவும் இல்லை

**75. 1 முதல் 100 வரை எண்ணால் எழுதும்போது எத்தனை முறை ஒன்பது என்ற எண் வரும்?**

A) 9 முறை
B) 11 முறை
C) 10 முறை
D) 20 முறை

**76. ஒருவர் கிழக்குப் பக்கம் நோக்கி நின்று கொண்டுள்ளார். அவர் $100^\circ$ வலதுபுறம் திரும்பிப் பின்னர் $145^\circ$ இடதுபுறம் திரும்புகிறார். அப்படியானால் அவர் கடைசியாக எந்தத் திசை நோக்கி இருக்கிறார்?**

A) வடக்கு
B) கிழக்கு
C) வடகிழக்கு
D) வடமேற்கு

**77. அக்டோபர் 1ம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்றால் நவம்பர் 1ம் தேதி என்ன கிழமை?**

A) திங்கள்
B) செவ்வாய்
C) புதன்
D) இவை எதுவும் இல்லை

**78. கீழ்க்கண்ட சொற்களில் குழுவுடன் சேராத சொல் எது?**

A) பெட்ரோல்
B) டீசல்
C) கேஸ்
D) மண்ணெண்ணெ

**79. ஒன்று முதல் 10 வரை ஆங்கிலத்தில் எழுதினால் அவற்றுள் 'E' என்ற எழுத்து எத்தனை முறை வரும்?**

A) 8 B) 9
C) 10 D) 11

**80. ஆங்கில அகராதியில் கீழ்க்கண்ட நான்கு வார்த்தைகளில் எது இறுதியாக வரும்?**

A) FIRE B) FREE
C) FEAR D) FOUR

www.prepp.in

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1.** (A) | **2.** (B) | **3.** (D) | **4.** (D) | **5.** (D) | **6.** (C) | **7.** (A) | **8.** (A) | **9.** (B) | **10.** (B) |
| **11.** (D) | **12.** (D) | **13.** (C) | **14.** (D) | **15.** (C) | **16.** (C) | **17.** (C) | **18.** (C) | **19.** (B) | **20.** (B) |
| **21.** (B) | **22.** (C) | **23.** (C) | **24.** (C) | **25.** (C) | **26.** (B) | **27.** (D) | **28.** (D) | **29.** (A) | **30.** (C) |
| **31.** (D) | **32.** (C) | **33.** (B) | **34.** (D) | **35.** (D) | **36.** (A) | **37.** (B) | **38.** (B) | **39.** (C) | **40.** (C) |
| **41.** (C) | **42.** (A) | **43.** (B) | **44.** (B) | **45.** (B) | **46.** (B) | **47.** (C) | **48.** (D) | **49.** (C) | **50.** (A) |
| **51.** (D) | **52.** (B) | **53.** (C) | **54.** (D) | **55.** (B) | **56.** (B) | **57.** (C) | **58.** (D) | **59.** (C) | **60.** (D) |
| **61.** (B) | **62.** (C) | **63.** (A) | **64.** (C) | **65.** (D) | **66.** (C) | **67.** (B) | **68.** (B) | **69.** (B) | **70.** (C) |
| **71.** (B) | **72.** (A) | **73.** (B) | **74.** (B) | **75.** (D) | **76.** (C) | **77.** (C) | **78.** (C) | **79.** (B) | **80.** (B) |